**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-06012021-4219

Volume: 6

Issue: 1

Month: July

Year: 2021

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 25.04.2021

Accepted: 02.06.2021

Published: 01.07.2021

Citation:
Premkumar, S. "Exorcism Rituals." *Shanlax International Journal of Tamil Research*, vol. 6, no. 1, 2021, pp. 146–151.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i1.4219

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Problems of the Life of Fishermen in the Literaryworks of C. Berlin

**E. Karna**
*Register No: 12408014, M.Phil. Research Scholar*
*Department of Tamil, Gandhigramma Rural University*
*Gandhigrammam*

**Abstract -** Kanyakumari district is one of the most popular fishing grounds in Tamil Nadu.By exploring the problems of the fishermen who live there, one is able to understand the nature, customs and uniqueness of the ancient Life. Born in the fishing community of Kurumbanai in Kanyakumari district, C. Berlin is well versed in the maritime problems that fishermen face on a daily basis and also the problems they face outside the sea. That is why his works, such as ' kadal thanni karikkuthu' (Short Story), Kadal adi (Novel), stress the problems and pains of fishermen.

**Key Words:** Tamil Novels, Criticism, Ethnological Novel, Fisherman's Life, C. Berlin, Kadal adi, Kadal thanni karuthirukku

**References**

1. Kurubanai berlin. S. (2011). Kadal Thannikarikuthu, Chennai, Pavai Achagam
2. Kurubanai berlin. S. (2018). Kadaladi, Chennai, New century book house pvt. ltd.

# சி.பெர்லின் படைப்புகளில் மீனவர்களின் வாழ்வியல் சிக்கல்கள்

**இ. கர்ணா**
பதிவுஎண்: 12408014, ஆய்வியல் நிறைஞர்
தமிழ்த்துறை, காந்தி கிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகம்
காந்தி கிராமம்

***ஆய்வுச் சுருக்கம்***

*தமிழ்நாட்டில் மீனவர்கள் பெரிதும் வாழும் பகுதியாகக் கன்னியாகுமரி மாவட்டம் அமைந்துள்ளது. அங்கே வாழ்கிற மீனவர்களின் வாழ்வியலை ஆராய்வதன் மூலம் தொன்மைக் குடியின் இயல்புகளையும், பழக்க வழக்கங்களையும், தனித்துவத்தினையும் அறிந்து கொள்ளமுடிகிறது. கன்னியாகுமரி மாவட்டம் குறும்பனை என்ற கிராமத்தில் மீனவர் சமூகத்தில் பிறந்த சி.பெர்லின், மீனவர்கள் அன்றாடம் சந்திக்கும் கடல் சார்ந்த சிக்கல்களையும் கடலுக்கு வெளியே எதிர்கொள்கிற சிக்கல்களையும் நன்கு அறிந்திருக்கிறார். எனவே தான், இவருடைய படைப்புகளான கடல் தண்ணி கரிக்குது (சிறுகதை), கடல் அடி (புதினம்), ஆகியன மீனவர்களின் வாழ்வியல் சிக்கல்களையும் வலிகளையும் அழுத்தமாகப் பதிவாக்கியுள்ளன.*

***முக்கியச் சொற்கள்:*** *தமிழ் நாவல்கள், திறனாய்வு, இனவரைவியல் நாவல், மீனவர் வாழ்க்கை, சி.பெர்லின், கடல் அடி, தண்ணி கரிக்குது.*

**முன்னுரை**

தமிழர்கள், தொன்மையான வாழ்வியலுக்கும், பண்பாட்டிற்கும், இலக்கியத்திற்கும் உரிமையுடையவர்கள். தமிழ்க்குடியினரான மீனவர்கள் பெரிதும் வாழும் பகுதியாகக் கன்னியாகுமரி மாவட்டம் அமைந்துள்ளது. இவர்களின் வாழ்வியலை ஆராய்வதன் மூலம் தொன்மைக்குடியின் இயல்புகளையும், பழக்கவழக்கங்களைம், தனித்துவத்தினையும் அவர்கள் நடப்பு வாழ்வில் ஏற்படும் பிரச்சினைகளையும் அறிந்துகொள்ளமுடியும். கன்னியாகுமரி மாவட்டம் குறும்பனை என்ற கிராமத்தில் மீனவர் சமூகத்தில் பிறந்த சி.பெர்லின், மீனவர்கள் அன்றாடம் சந்திக்கும் கடல்சார்ந்த சிக்கல்களையும் கடலுக்கு வெளியே சந்திக்கும் சிக்கல்களையும் நன்கு அறிந்துள்ளார். எனவே தான் பிறபடைப்பாளர்களை விட இவருடைய படைப்புகளான கடல் தண்ணிகரிக்குது (சிறுகதை), கடல் அடி (புதினம்), ஆகியன மீனவர்களின் வாழ்வியல் சிக்கல்களையும் வலிகளையும் அழுத்தமாகப் பதிவாக்கியுள்ளன.

**மீனவர்கள்**

சமவெளிகளில்வாழ்கிறபெரும்பான்மை மக்களுக்குக் கடல்மீன்களைக் தெரியும்; ஆனால் மீனவர்களைத் தெரியாது; மீனவர்களின் வாழ்க்கை தெரியாது; மீனவர்களின் பண்பாடு தெரியாது. அப்படி ஒரு வேட்டைச் சமூகம் சமகாலத்தில் வாழ்ந்து கொண்டிருப்பதான எண்ணம் இங்குப் பலருக்கும் இல்லை, சுனாமி எனப்படும் ஆழிப் பேரலை தான், மீனவர்களைப் பற்றிய தகவல்களைப் பொதுவெளியில் கொண்டுவந்து சேர்த்தது. இம்மக்கள் தங்களுக்கான உரிய மதிப்பும் உரிமையும் பெறாமலே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். வைதிக சநாதனம் காரணமாக இந்திய நிலப்பரப்பில் மீனவர்களைச் சண்டாளர்கள் என்றும் மீன் பிடிதொழிலைச் சண்டாளத் தொழில் என்றும் கருதுகின்ற நிலை நிலவுகிறது.

கடற்கரையிலேயே படுத்திருந்து கடலில் ஏற்படும் மாற்றங்களைக் கவனித்து எப்போது கடலுக்குள் இறங்கினால் மீன் அதிகமாகக் கிடைக்கும் என்பதை உணர்ந்து அது எந்நேரமாக இருந்தாலும் படகுகளை கடலில் செலுத்தி மீன்பிடிக்கப் போகிற மீனவர்கள் எப்போது திரும்புவார்கள் என்பதற்கு எந்த உத்திரவாதமும் கிடையாது. கடலுக்குள் இருந்து கரைக்குத் திரும்பும் போது மீன்களோடு திரும்புவார்களா என்பதற்கும் உத்தரவாதம் கிடையாது. நிச்சயமின்மை தான் நிச்சயம் என்பதான தினசரி வாழ்க்கையும் கடலில் அலைகளோடு போராடும் உடல் வலிமை சார்ந்த மனநிலையும் தான் அன்றாட வருமானத்தையும் அவர்களின் குணநலன்களையும் தீர்மானிக்கின்றன. இயற்கையோடு போராடும் சமூகமாக இன்றைய காலத்திலும் மீனவ மக்கள் வாழ்கின்றனர்.

**மீனவர்களின் வாழ்வியல் சிக்கல்கள்**

மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு உள்ளாகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் ஆனி, ஆடி மாதங்களில் கடல் அரிப்பினால் கடற்கரைக் கிராமங்களில் ஒருவரிசை வீடுகளையாவது கடல் இழுத்துச் செல்வது வழக்கமாக உள்ளது. கடற்கரையைத் தவிர உள்பகுதியில் சொந்தமாக யாருக்கும் நிலம் இல்லை, கடலில் எப்போது என்ன மாற்றம் ஏற்படும் என்பது யாருக்கும் தெரியாது. கடலின் நிலையினைப் பார்த்து மீன்பிடிக்கச் செல்வதற்காகக் கடற்கரைகளில் வீடுகளைக்கட்டி மீனவர்கள் வாழ்கிறார்கள். கடலும் கடற்கரையும் தான் மீனவர்களுக்குச் சொந்தம் என்ற நிலையில் தான் வாழ்க்கை இருக்கிறது.

கடல்சீற்றத்தின் போது பேரலைகள், மீனவர்களின் குடியிருப்புகளை வாரிச்சுருட்டிக் கொண்டு போய்விடும். கடற்கரையை விட்டால் ஒருசென்டு இடம்கூட பெரும்பாலான மீனவர்களுக்குச் சொந்தமில்லை, நிலமற்ற சமுதாயமாக மீனவச்சமுதாயம் வாழ்ந்து வருகிறது. வீடுகளை இழந்த மீனவர்கள் வேறு இடங்களில் மாற்று வீடுகள் கேட்டால் அரசுகையை விரிக்கிறது. நானூறு ரூபாயும் பத்துகிலோ அரிசியும் கொடுத்துவிட்டு அரசும் அமைதியாகி விடுகின்றது. பல ஆயிரம் கோடி அந்நியச் செலாவணியை ஈட்டிக்கொடுக்கும் மீனவனுக்கு கடல்அரிப்பில் இருந்த வீடுகளுக்குப் பதிலாக மாற்றுவீடு கள் கட்டிக்கொடுக்க அரசிடம் காசில்லை என்பது தான் யதார்த்த நிலை.

**இயற்கைச் சீற்றம்**

இயற்கை எப்போதும் மக்களுக்குச் சாதகமாகச் செயல்படுவதில்லை. அது, அவ்வப்போது ஏதாவது ஒரு நிலையில் தனது கோபத்தை வெளிப்படுத்திக் கொண்டே இருக்கின்றது. கடல்சீற்றம், வெள்ளப்பெருக்கும் ஒவ்வொரு வருடமும் ஏற்படுகிற போது, கடல் அரிப்பில் இருந்து மீனவர்கள் தங்கள் வீடுகளைப் பாதுகாக்க படாதபாடுபடுவார்கள். ஊரில் கமிட்டிக்காரர்கள் தீர்மானம் போட்டு ஐநூறு, ஆயிரம் என்று சாக்கு வாங்கி இருப்பு வைத்திருப்பார்கள். ஆனி, ஆடிவந்தாலே கடலடியும் சேந்துவரும். கடலில் அரிச்ச வீடுகளை இழுத்துட்டு போகும் என்பது முன்கூட்டியே தெரியும், இது வருடம்தோறும் நடக்கின்ற நிகழ்வுதான். கடல்அடி நேரங்களில்கடல்அரிப்பெடுத்துக் கொண்டு வந்தால், கடற்கரை ஓரமாக ஒவ்வொரு வீட்டுக்கும் ஐம்பது அறுபது சாக்குப்பபையைக் கொடுப்பார்கள் அந்த சாக்குப்பையில் மனலை நிறப்பி வீட்டின் அஸ்திவாரத்தை கடல்பெயர்த்துக் கொண்டு போகாமல் இருக்கும் விதத்தில் அஸ்திவாரத்தின் ஓரத்தில் அடுக்கி, சாக்கும் மணலையும் கடல்இழுத்துக் கொண்டு போகாமலிருக்ககாத் தாடிக்கம்புகள், பாய் மரத்திகள், மூங்கில் கழிகளை ஆழக்குழி நோண்டி நட்டு, மணல் நிரப்பிய சாக்குப்பைகளின் குறுக்காகக் கம்புகளைக் கட்டி அதையெல்லாம் சேர்த்து பெரிய கரமடி வடத்தால் கட்டி கரையில் நிற்கும்

தென்னைமரம், வடக்கே இருக்கும் வீடுகள் போன்றவற்றில் இழுத்துக் கட்டிவைப்பார்கள், இவ்வளவு பாதுகாப்பையும் தாண்டி, கடல் அலை உள்ளே புகுந்து வீடுகளை இழுத்துச் சென்றுவிடும். கடல் அரிப்பால் பாதிக்கப்படும் வீடுகளைப் பாதுகாக்க எல்லாரும் கடற்கரையில் வந்து சாக்கு அடுக்குவார்கள், இருந்தாலும் இயற்கையின் சக்தியை யாராலும் கட்டுப்படுத்த முடியாது, இதனை, வெள்ளப்பெருக்கம் வந்தா, புயலு அடிச்சா, நிலநடுக்கம் வந்தா, பூகம்பம் வந்தா, அது இயற்கைப் பேரழிவாம், ஆனா வருசம் தோறும் வந்து இப்பிடி ஒருவரிசை வீடஇழுத்திட்டுப் போய் ஆயிரக்கணக்கான மக்கமனுஷருக்க வாழ்க்கையையே அழிச்சுத இந்த கடல் கொந்தளிப்பும், கடலரிப்பும் இயற்கைப் பேரழிவு இல்லையாம்[1] கடல் அரிப்பினால் பலகுடும்பங்கள் பக்கத்து வீடுகளிலோ அல்லது சொந்தக்காரர்களின் வீடுகளிலோ அல்லது பள்ளிக்கூடங்களிலோ அல்லது தேவாலயங்களிலோ அடைக்கலம் தேடி அலைகின்ற நிலைமைக்கு தள்ளப்படுகின்றனர்.

### மணல் கொள்ளையும் புற்றுநோய் வரக் காரணமும்

மனிதர்கள் பூமியில் எதையுமே விட்டு வைப்பதில்லை என்பதற்கு எடுத்துக்காட்டாகக் கடற்கரையில் இருக்கும் மணலையும் எடுக்க ஆரம்பித்தார்கள் அதனால் கடலில் மண் அரிப்பு ஏற்பட்டு பள்ளம் உருவாகின்றது. ஒவ்வொருநாளும் ஆயிரக்கணக்கானடன்னு மணலகம் பேனிக்காரன் தோண்டித் தோண்டிக் கொண்டு போனா என்ன ஆவும்? நம்ம ஊருமட்டுமில்ல நம்மஊரப் போல இன்னும் ஏழு ஊருல உள்ள மணலதெனமும் ஆயிரக்கணக்கான டன்னுன்னு கணக்கில்லாம தோண்டி எடுத்திண்டு போறானுவ... கடக்கர மணல தோண்டி எடுக்குறதுனால பள்ளத்தத் தேடி கடல் பாஞ்சு வருது[2] என்ற பேச்சு நாவலில் இடம் பெற்றுள்ளது. கடற்கரையில் ஒரு இடத்தில் பள்ளம் தோண்டினால் அந்தப் பள்ளத்த நிரப்ப இன்னொரு இடத்தில் இருந்து மணலை எடுத்துக் கொண்டு வந்து அந்தப் பள்ளத்தை நிரப்பும் அரசாங்க மணல்கம் பேனியும், தனியார்கம் பேனியும் கடற்கரை மணலை அள்ளிக் கோடிகோடியாகக் கொள்ளை அடிக்கின்றன.

காலங்காலமா மலைகளில் இருந்து தாதுக்களையும் கனிமங்களையும் ஆத்துத் தண்ணி இழுத்திண்டு வந்து கடல்ல கொண்டு சேக்குது. கடலு அந்த தாதுக்களையும், கனிமங்களையும் கடற்கரையில் அடிச்சு ஒதுக்குது. இப்பிடி பல ஆண்டுகளா தேங்கிக் கிடக்குத மணலுலகதிரியக்கப் பாதிப்புகள் அதிகம் இருக்குமாம். அதுல ஆல்பா கதிர், பீட்டாகதிர், காமா கதிர் இப்பிடி கதிரியக்கம் இருக்குமாம் அந்தக் கதிரியக்கம் மணலுக்குள்ள இருக்குறது வர எந்தப் பாதிப்பும் இல்லையாம். அது சுற்றுச் சூழலுக்கு பாதுகாப்பா இருக்குமாம். ஒரு சென்டி மீட்டர் மணல் சேர நூறுவருசமாகும், அந்த கனிமங்களும் தாதுக்களும் கலந்த மணலைத் தோண்டி எடுக்கும் போது கதிரியக்கம் வெளிப்படும், அதுமட்டுமில்லாம தோண்டி எடுக்குத மணலகம் பேனியல கொண்டு போய் இல்மனேட், ரூட்டேல், சிர்க்கான், புளூட்டோனியம், மேனோசைட், சிர்க்கோனியம், யுரேனியம், தோரியம் இப்படி பல கனிமங்களாப் பிரிக்கும் போதும் அதுல இருந்து கதிரியக்கம் வெளிப்படுமாம். அப்படி வெளியாகக் கூடிய கதிரியக்கத்துனால மனுச ஒடம்புல கேன்சர் பரவுதாம். இது விஞ்ஞானம் சொல்லித்தாற பாடம்[3] மணல் கொள்ளையின் பின்புலத்தில் மக்களின் உடல்நலமும் பாதிக்கப்படுகிறது என்று நாவலாசியர் பெர்லினின் கருத்து வெளிப்பட்டுள்ளது. கடற்கரையில் மணல் எடுப்பதால் கடற்கரையோரம் வாழ்கிற மீனவ மக்கள் புற்றுநோயினால் செத்து மடிந்திட நேர்கிறது என்பது முக்கியமான தகவல்.

மீனவக் கிராமங்களில் வாழ்கிற மக்களுக்குப் பேருந்து வசதி இல்லாததால் அவர்களுடைய

குழந்தைகள் மேல்படிப்பைத் தொடர முடியவில்லை. பிள்ளைகள் நான்கு கிலோ மீட்டருக்கு அப்பால் இருக்கும் மேல்நிலைப் பள்ளிக் கூடத்திற்குச் சென்று படிக்க பெற்றோர்கள் விரும்புவதில்லை. மீனவ மக்களின் ஊருக்குள் பேருந்து வசதி இல்லாத காரணத்தினால், செட்டியூர் வழிதான் சாலை வசதி இருக்கிறது. பனையூருக்குச் சாலை வசதியை உருவாக்கிப் பேருந்து வசதி செய்து தரக்கேட்டு இளைஞர்கள் சேர்ந்து போராடினார்கள், சாலை அமைக்க ஏற்பாடு செய்ய இடம் சாலைப் புறம் போக்கு. அதில் இரண்டு பக்கமும் தென்னந்தோப்பு வைத்திருக்கிற மீனவரல்லாத மாற்றுச் சமூகத்தினர் ஆக்கிரமிப்பு செய்து அந்தப் புறம்போக்கு இடங்களில் தென்னை நட்டு காலங்காலமாக அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் வழி தர மறுத்து, இடம் தரவில்லை. இநிலையில் என்ன செய்யலாம் சொல்லு… என்று தலைவனின் கட்டளைக்குக் காத்து நிற்கும் படைவீரர்கள் போல் திமிறிக்கொண்டு நின்றார்கள். ஊரில் இளைஞர் இயக்கம் தொடங்கி கொஞ்ச நாள் தான் ஆவுது, பங்கு சாமியார் இளைஞர் இயக்கத்தினருக்குப் பயிற்சியும் வெளியூரிலிருந்து ஆட்களைக் கொண்டு வந்து கருத்தரங்குகளும் நடத்திக் கொண்டிருந்தார்[4] மீனவக் கிராமங்களுக்குப் பேருந்து வசதி இல்லாமல் மக்கள் துயரப்படும் நிலையினை இவ்வரிகளின் வழி அறிய முடிகின்றது.

### தண்ணீர்ப் பிரச்சினை

மீனவர்களின் கிராமங்களில் மக்கள் குடிப்பதற்குத் தேவையான தண்ணீர் வசதி இல்லை. அந்த ஊர்களுக்கு நான்கு நாட்களுக்கு ஒருமுறை தான் தண்ணீர்வரும். பெண்கள் அவர்களுக்குள் சண்டை போட்டுக்ண்டு தண்ணீர் பிடிப்பார்கள் சண்டையை விலக்கும் போது, ஆமா இதுக்கு மட்டும் நாட்டாமை செய்யவாங்க… தண்ணீ ஒழுங்காவருல்லையே, பத்து பேரு தண்ணிபுடுச்சுத அளவு தண்ணிவாற பைப்புல நூறுபேரு குடம் வச்சிருக்கோமே, புதுசா பைப்பு வச்சு தினசரி தண்ணி உட இந்த ஆம்பளைங்க ஏதாவது செய்தாவா? அதச்செய்ய துப்பில்லை… எனக்கு மாப்பிள்ளை மட்டும் ஊருல இருந்திருக்கணும் தெரியப் பாத்தது கத[5] என்று சண்டை போட்டுக் கொண்டிருந்தனர். மீனவர்கள் தண்ணீர் தேவை உள்ளிட்ட பல்வேறு நிலைகளில் துயரப்படுவதை நாவல் சித்திரித்துள்ளது.

### கிறித்தவ சமயம்

மீனவர்கள் வழும் கிராமங்களில் தேவாலயங்கள் இருக்கும். மீனவர்கள் பெரிதும் கிருத்துவ மதத்தைச் சார்ந்தவர்களாகத் தான் இருப்பார்கள். ‘மெனக்கெடு’ என்ற சிறுகதையில் சாமியார் ஆவேசமாகப் பிரசங்கம் செய்து கொண்டிருந்தார் சாமியார் பிரசங்கம் செய்வதில் திறமையானவர். கடற்கரையைத் தொட்டு இந்த கோயில் இருந்த ஊருக்கு மேற்குப்பக்கம் நுழையவர்கள் இருந்தனர். அவர்களும் மீனவர்கள் தான். சவேரியார் கடலோர மக்களை மதம் மாற்றிய போது ஒட்டுமொத்த மதம் மாற்றம் நடந்தது. இதில் மதம் மாறாமல் இந்துக்களாக இருந்தவர்கள் தான் இந்த நுழையர்கள். பெரும்பாலான கிறிஸ்தவர்கள் இந்த நுழையர்களை ஊரின் ஒரு பகுதியில் ஒதுக்கி வைத்தனர். கடலோரக் கிராமங்களில் பெரிய பெரிய கிறிஸ்தவ கோயில்கள் தோன்றிய பின் நுழையர்கள் ஒதுக்குப் புறமாக ஓரங்கட்டப்பட்டார்கள். அவர்கள் தேங்காய் கதம்பையை தண்ணீரில் ஊறப்போட்டு அந்தக் கவுரியை கயிறாகத் திரித்து விற்பனை செய்து வந்தனர். மீனவர்கள் ஞாயிற்றுக் கிழமை மட்டும் கடலுக்குப் போகமாட்டார்கள். இது அவர்களுக்குப் பாதிரியார் விதித்த கட்டுப்பாடு என்று கூறுகின்றனர். “கடல்அடி’ நாவலில் மீனவர்கள் தம் வருமானத்தில் பத்தில் ஒரு பங்கைவரியும், கூறுமாகக் குடுத்துச் சேர்த்த பணத்தில் நிலம் வாங்கினாலும், அதை ஒரு பங்குசாமியார் பேரிலும் மெட்ராானியார் பெயரிலும் ஊருபாது

காவலர் பெயரிலும் பத்திரம் பதிஞ்சு வத்திருப்பர். மீனவர்கள் தங்களுடைய வருவாயில் ஒரு பகுதியைத் தேவாலயங்களுக்குக் கொடுப்பதை அறிய முடிகின்றது.

### பொருளாதார நிலை

மீனவர்கள், தாங்கள் பிடிக்கும் மீன்கள் மூலம் கிடைக்கிற பணத்தை அன்றே செலவு செய்யும் பழக்கம் உடையவர்களாக வாழ்ந்து வந்தனர். அவர்களுக்குச் சேமிக்கும் பழக்கம் இல்லை. மறுநாள் கடலுக்குப் போகவில்லை என்றால் துன்பப்படும் நிலையைக் காணமுடிகின்றது. பலநாட்கள் கடலில் உழைத்துவிட்டு வந்து, கிடைக்கும் பணத்தை ஆடம்பரமாகச் செலவு செய்கின்றனர். பொண்டாட்டி புள்ளவளையும், சொந்த பந்தங்களையும் ஊருஓலகத்தையும் உட்டுண்டு, ரண்டு வருசம் மூனுவருசம் வெளிநாட்டுல நிண்ணு சம்பாதிச்சிண்டு, மூனுமாசமோ நாலுமாசமோ லீவுகெடச்சு ஊருக்குவாறானுவ. அம்புடு நாளையும் சமாளிச்ச முடியாம சிபி இசட்வண்டி எடுக்குதானுவ. அப்பதானே பெண்டாடிய பின்னால ஏத்திவச்சு பவுறு காட்டலாம். ஒருபைக்கே ஒரு காரு கவெலவிக்குது. அதத்தான் வாங்குதானுவ[6] மீனவர்கள் கடலில் போராடி, சம்பாதித்த பணத்தைச் சேமித்து வைக்காமல் தண்ணீராகச் செலவு செய்வதைப் பற்றிய பதிவு, நாவலில் இடம் பெற்றுள்ளது,

கன்னியாகுமரி கடலில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் கடலில் புயல் ஏற்பட்டதால் மரக்கலம் கவிழ்ந்தது, அதிகாரிகள் காணாமல் போன இரு மீனவர்களை இராமேஸ்வரம் கடலில் தேடினார்கள். அதிகாரிகள் மீனவர்களைத் தேடுவதில் ஆர்வம்காட்டாமல்நடுக்கடலில் பெண்ணுடன் உல்லாசம் அனுபவித்தல் போன்ற மன்னிக்க முடியாத குற்றங்களைச் செய்தனர். இவை மட்டுமில்லாமல் மீனவர்கள் கடலுக்குச் செல்லும் போது, பாதுகாக்கக் கூடிய அதிகாரிகள் சரியான பாதுகாப்பு வழங்காததால், இலங்கைக் கடற்படையினரிடம் மாட்டிக் கொண்டு சுட்டுக்கொல்லப்படுகிற அவலநிலையும் மீனவ சமுதாயத்தில் நிலவுகிறது.

### முடிவுரை

மீனவ சமுதாயத்தினர் அன்றாடம் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகின்றனர், சரியான பேருந்து வசதி, மருத்துவ வசதி, குடிநீர் வசதி, பாதுகாப்பு வசதி, இருப்பிட வசதி இப்படி எந்தவொரு பாதுகாப்பும் இல்லாத சூழலில் தான் மீனவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். கடலையும் கடற்கரையையும் கடலோர மக்களையும் அவர்களின் தொழிலையயும் கடலுக்குள் நிகழும் சம்பவங்களையும் கடலோரக் கிராமங்களில் நிகழும் வாழ்வியல் சிக்கல் களையும் சித்திரிப்பதாகப் பெர்லினின் எழுதியுள்ள படைப்புகள் அமைந்துள்ளன.

### குறிப்புகள்

1. சி.பெர்லின், கடல்அடி, ப.10
2. மேலது, ப.18
3. மேலது, ப.19
4. மேலது, ப.32
5. மேலது, ப.59
6. கடல்தண்ணிகரிக்குது, ப.5

### துணைநூற்பட்டியல்

1. குறும்பனை பெர்லின், சி. (2011). கடல் தண்ணிகரிக்குது, சென்னை, பாவை அச்சகம்.
2. குறும்பனை பெர்லின், சி. (2018). கடல்அடி, சென்னை, நியூசெஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட்.